# பெரியபுராணம் காட்டும் வாழ்வியல்

தவத்திரு . சுந்தர சுவாமிகள்
தமிழ்நாடு

பெரியபுராணம் முழுவதும் நாயன்மார்களின் வாழ்வைச் சொல்வதுபோல நமக்கெல்லாம் வாழும் நெறியைச் சொல்கிற வாழ்வியல் நூலாகவே இருக்கிறது. எந்த எந்த நோக்கத்தில் பார்த்தாலும் அத்துணையும் பெரியபுராணத்திலேயே பார்க்க முடியும். சாதாரணமான உலகியலை வைத்து, உலகியல் வாழ்வையே வைத்து நாம் செய்கிற எல்லாச் செயல்களையும் காட்டிச் சேக்கிழார்பெருமான் பெரியபுராணத்தைப் பாடியிருக்கிறார். சோறு சமைப்பதைக் கூட எடுத்துக் காட்டுகிறார்.

சில வீடுகளில் சோறு சமைக்கிறபோது, காய்கறி பதார்த்தங்களை எல்லாம் செய்துவிட்டுக் கடைசியாக அன்னத்தைச் சமைக்கிறார்கள். ஆனால் சேக்கிழார் பெருமான் அப்படிச் செய்வது மரபு அன்று -என்று நமக்கு உபதேசம் செய்ய வரமாட்டார். முதலிலே அன்னத்தைச் சமைத்துவிட்டுப் பிறகு வேண்டிய பொருள்களை ஆக்கிக்கொள்வதுதான் மரபு என்பாரைப்போலக் காரைக்கால் அம்மையாராகிய புனிதவதியார் இப்படிச் சமைத்தார் என்று காட்டுகிறார். வீட்டுக்கு விருந்தாளி வருகிறார். அவசரமாகப் போகவேண்டும். சோறு மட்டும் இல்லை. மற்றவை எல்லாம், இருக்கின்றன என்றால் எப்படி உபசரிப்பது? அலுவலகம் செல்லவேண்டும். வீட்டிலே எல்லாம் இருக்கிறது. சோறு மட்டும் இல்லை என்று சொன்னால் எப்படி நாம் உண்ண முடியும்? சோறு மட்டும் இருக்கிறது. வேறு ஒன்றும் இல்லாவிட்டாலும் தயிரைவிட்டுச் சாப்பிட்டுவிட்டுப் போய்விடலாம். ஓர் ஊறுகாய் வைத்து சாப்பிட்டுவிட்டுப் போய்விடலாம். ஆகவே முதலிலே படைப்பதுதான் முதலிலே சமைக்கவேண்டியதாகும், இப்படிச்செய் என்று அவர் சொல்லவில்லை -காரைக்கால் அம்மையார் அப்படிச் செய்தார் என்று காட்டுகிறார்.

இன்னொன்று - அடிக்கடி சொல்வதுண்டு. அப்பூதியடிகளாரின் வரலாற்றைக்கொண்டு விருந்தாளிகளுக்கு வாழையிலைபோட்டு உணவு பரிமாறுகிறபோது அந்த இலையை எப்படிப் போடவேண்டும் என்கிற மரபையே காட்டுகிறார். ஆக எந்த வரலாற்றை எடுத்துக்கொண்டாலும் பலபடியாக நமக்கு மரபுகளைக் காட்டுகிறார். ஒரு தண்ணீர்ப் பந்தல் அமைப்பது என்றாலும் கோடைக் காலத்தில் அமைக்க வேண்டும். மக்கள் செல்கிற இடமாகப் பார்த்து அமைக்க வேண்டும். அது நிரந்தரமாக நடைபெறுவதற்குத் தகுந்த முறையில் அமைக்க வேண்டும் என்பதனை எல்லாம் நமக்கு எடுத்துக் காட்டுகிறார். அப்படி அமைக்கவேண்டுமென்று நமக்குச் சொல்லவில்லை. அப்பூதியடிகளார் அப்படி அமைத்தார் என்று சொல்வதன் மூலம் நமக்கு உணர்த்துகிறார்.

"அளவில்சனஞ் செலவொழியா வழிக்கரையில் அருளுடையார்
உளமனைய தண்ணளித்தாய் உருவேனிற் பரிவகற்றி"

என்கிறார். அந்தத் தண்ணீர்ப் பந்தலுக்கு வருகிற வழியில்கூட சோலை இருக்க வேண்டுமாம். ஏன் ஒருவன் வெய்யிலில் வருகிறபோது தண்ணீரைக் குடித்தால் தொண்டைகட்டிக் கொள்ளும். பக்கத்தில் வருகிறபோது கொஞ்சம் குளிர்ந்து வந்துவிடவேண்டும். அதற்குப் பிறகு அந்தத் தண்ணீரைக் குடிக்கவேண்டும்.

"வளமருவும் நிழல்தரு தண்ணீர்ப்பந்தர் வந்தணைந்தார்"
என்றும் சொல்வார்.

ஒருவரிடம் ஒரு சேதியைக் கேட்கிறோம். அவர் அதற்குப் பதில் தருவதாக இருந்தால் தெளிவாகத் தரவேண்டும். இப்படிப் பேசுகிற மரபைக்கூடச் சேக்கிழார் பெருமான் மிக அற்புதமாகக் காட்டுறார்.

அங்கே இருக்கிற தண்ணீர்ப்பந்தலைப் பார்த்து அப்பர் அடிகளார் 'இது யார் வைத்தது' என்று வினாவுகிறார். அங்கே இருந்தவர் அதற்குப் பதில் சொல்கிறார்:

"ஆண்டஅர செனும்பெயரால்
செப்பருஞ்சீர் அப்பூதி அடிகளார் செய்தமைத்தார்
தப்பின்றி எங்குமுள சாலைகுளங் கா" என்றார்.

அப்பூதி அடிகளார் வைத்தது என்று சொல்லிவிட்டுப் போகலாமே. சொல்கிறார். தண்ணீர்ப்பந்தல் மட்டுமன்று என்பாரைப்போல, சாலை செய்தார், சோலை செய்தார், குளங்கள் வெட்டினார் என்று கூறுகிறார். அவர் செய்வன எல்லாம் மிக நன்றாக இருக்கும்.

"தப்பின்றி எங்குமுள சாலைகுளங்கா"
தப்பு இல்லாமல் இருக்கும். அவர்போட்ட சாலை கரடுமுரடாக இருக்காது. அவர் வைக்கிற சோலை குளிர்ந்ததாக இருக்கும். வெட்டப்பட்ட குளம் போதுமானதாக இருக்கும்.

அதற்கு அடுத்து 'அவர் எவ்விடத்தார்?' என்கிற ஒரு கேள்வியைப் போடுகிறார் அப்பர் அடிகள்.

அவர் திங்களூர்க்காரர் என்று அவர் ஒரு

சொல்லிலே விடை அளித்திருக்கலாம். அவர் சொல்கிறார்.

"துன்றியநூல் மார்பரும்இத் தொல்பதியார் மனையின்கண்
சென்றனர்இப் பொழுததுவுஞ் சேய்த்தன்று நணித் தென்றார்"

இந்த ஊரைச் சேர்ந்தவர் தான் என்கிறார். இப்பொழுது வீட்டில் இருப்பாரா என்கிற கேள்விக்கு இடமின்றி மனையின்கண் சென்றனர் என்கிறார். எப்போது வீட்டுக்குப் போனாரோ, இப்பொழுது வீட்டில் இருப்பாரோ என்னவோ என்கிற சந்தேகத்திற்கு இடமின்றி, மனையின்கண் சென்றனர் இப்பொழுது' என்கிறார். சரி, நாம் நேரே போகலாம். அவர் வீடு எங்கே இருக்கிறதோ என்கிற சந்தேகத்திற்கு இடமின்றி,

"சேய்த்தன்று நணித்தென்றார்"

இப்படிச் சேக்கிழார் பெருமான் ஒருவருக்கொருவர் பேசுகிற வழியை மரபைக் கூடக் காட்டுகிறார்.

இன்னும் பாருங்கள். அப்பூதி அடிகளார் தம்முடைய குழந்தைகளில் மூத்த திருநாவுக்கரசை, அப்பர் அடிகளார்க்கு அமுது செய்விப்பதற்காக வாழையிலை பறித்துவரச் சொல்கிறார். தோட்டத்தில் எத்தனையோ பேர் வேலை செய்துகொண்டிருக்க நம்மைப் போய், வேலைக்காரனைப் போல இலை பறித்துவரச் சொல்கிறாரே தந்தையார், என்றா அந்தப் பையன் நினைத்தான்?

"நல்லதாய் தந்தை ஏவ நான்இது செய்யப்பெற்றேன்"

நம்மை அல்லரோ நம்முடைய நல்ல தாயும், தந்தையும் இப்பணியைச் செய்ய ஏவினார்கள் என்கிற நினைப்பைக் காட்டுவதில் இருந்தே குழந்தைகள் எத்தகைய மனோபாவம் உடையவர்களாக இருக்கவேண்டும் என்கிற மரபைக் காட்டுகிறார் சேக்கிழார் பெருமான்.

இன்னும் பாருங்கள். வாழையிலையைக் கொண்டுவந்து போடுகிறபோதுகூட ஒரு மரபைக் காட்டுகிறார். அப்பர் அடிகளுக்கு அமுதுபடைக்க நுனி எப்படி இருக்கும்படியாகப் போட்டார்கள்?

"ஈர்வாய் வலம்பெற மரபின் வைத்தார்"

என்றார். தலைவாழையை அறுத்த பக்கம் வலமாக இருக்கும் படியாகப் போட்டாராம். நாம் எல்லாம் நுனி இலை இடப்பக்கமாக இருக்கவேண்டும் என்கிறோம். சேக்கிழார் பெருமான் இடம் என்ற சொல்லைக்கூட உபயோகிக்காது -நறுக்கிய பக்கம் வலமாக இருக்கும்படியாகப் போட்டார் என்கிறார்.

அந்த இலை ஒரு பாதி சுருண்டிருந்தது. ஒரு பாதி விரிந்திருந்தது. முற்றும் விரிந்திருந்தால் அந்த இலை முற்றல் -கைபட்டால் கிழியும். முற்றும் சுருண்டிருந்தால் அந்த இலை குருத்து. விரித்தால் கிழியும். ஆகவே அப்படிக் கொஞ்சம் தண்ணீர் தெளித்து அந்த இலையை விரித்துப்போட்டாராம்.

"குருத்தினை விரித்து நீரால்
மகிழ்ந்துடன் விளக்கி ஈர்வாய் வலம்பெற மரபின் வைத்தார்"

தலைவாழையை நறுக்கிய பக்கம் வலமாக இருக்கும்படி போட்டார் என்பதாக நாமும் அப்படிப்போடுவதே மரபு என்பாரைப்போலக் காட்டுகிறார்.

காலையில் எழுந்தவுடன் நாம் ஸ்நானம் செய்வதற்குமுன் வெளியே போய்விட்டு வருவோம். அது இயற்கை நியதி. அதை எறிபத்த நாயனார் புராணத்தில் எப்படிச் சொல்கிறார் சேக்கிழார் பெருமான் பாருங்கள்.

"வைகறை உணர்ந்து போந்து புனல்மூழ்கி"

போந்து என்ற சொல்லிலே - இயற்கை உணர்ச்சி வந்தால் எழுந்துவிடவேண்டும். யாரும் எழுப்பமாட்டார்கள். வைகறை உணர்ந்து, அப்புறம் வெளியே போய் -என்பதைப் போந்து என்பதனாலே நேரிடையாகச் சொல்லாது ஆனால் சொல்லியும் இருக்கிற நயம் சாலச்சிறப்புடையது.

இன்னும் அடியார்களுக்குத் துன்பம் வந்தது என்பதைக்கூடச் சேக்கிழார் பெருமான் அப்படியே சொல்லமாட்டார். அதையே மங்கலமாக

"அடியார்க்கு அடாதன அடுத்த போது"

இன்னும் சாதாரணமாக நடைபெறும் திருமணச்சடங்கை எத்தனை வகையாகக் காட்டுகிறார். எட்டுநாள் நடக்கிற திருமணம் ஒருநாள் நடக்கிற திருமணம், ஒரு மணி நேரத்திலே நடக்கிற திருமணம் என்பனவாக ஞானசம்பந்தரின் திருமணம், சுந்தரரது தடைப்பட்ட திருமணம், பிறகு பரவை, சங்கிலியாருடைய திருமணம், இன்னும் ஞானசம்பந்தர் தாமன் மகளுக்கு ஒரு மணி நேரத்தில் பண்ணிவைத்துவிட்டுச் சென்ற திருமணம் -ஆக இன்று நம் சமுதாயத்தில் நடைபெறுகிற தன்மையிலேயே திருமணச்சடங்கைச் சந்தர்ப்பம், அவரவர்களுக்கு இருக்கக்கூடிய நிலைமை இவை கொண்டு வரலாற்றின்மூலம் விளக்குகிறார்.